மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதையெல்லாம் நகராட்சி நிர்வாகத் துறையில் கொடுங்கள் அல்லது உள்ளாட்சித் துறையில் கொடுங்கள். இதற்கு தனிக் கேள்வி கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வணிக வரித் துறைக்கு நல்ல மாண்புமிகு அமைச்சரைக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். நீங்கள் real estate குறித்து பேசுகிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதில் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியை DTCP–ல் கேட்க வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. அதை தனிக் கேள்வியாகப் போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதை தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

பேருந்து நிறுத்தம்

***43331—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வழியாக 100 அடி சாலையில் செல்லும் பேருந்துகள் முதலாவது மற்றும் மூன்றாவது அவென்யூ சந்திப்பில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்பேட்டிலிருந்து 100 அடி சாலை வழியாக அசோக் நகர் வழியாகச் செல்கின்ற சாலை, போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அந்தப் பேருந்துகளை, அந்த இடங்களில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல இயலாத நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு, அசோக் நகர் வழியாக 100 அடி சாலைப் பகுதியில் மக்கள்தொகை அதிகம் உள்ள காரணத்தினால், பேருந்துகள் எதிர்காலத்தில் அங்கு நின்று செல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு 100 அடி சாலை வழியாக அசோக் நகர் வழியாகச் செல்லும் பேருந்துகள் 3-வது அவென்யூ மற்றும் முதல் அவென்யூ சந்திப்பு வரை தொடர்ந்து 3 போக்குவரத்து சிக்னல்களைக் கடக்க வேண்டும். இந்த 3 சிக்னல்களைக் கடந்து பேருந்துகள் நிறுத்தப்படும்பொழுது, கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் பேருந்துகளை நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்குவது என்பது மிகவும் சிரமமான விஷயம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை இங்கே வலியுறுத்தியிருக்கின்றார். எனவே, உரிய அதிகாரிகளோடு கலந்துபேசி, பரீட்சார்த்தமான முறையில் முயற்சி செய்து பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அப்பகுதியில், கே.கே. நகரிலிருந்து சாமியார் மடம் வழியாக வள்ளலார் நகர் வரை சென்றுகொண்டிருந்த 37D பேருந்து சேவை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று, mini bus. தி. நகர் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கு மாம்பலம், சாமியார் மடம், வடபழனி பஜனை கோயில் தெரு வழியாக கோயம்பேடு செல்வதற்கு மினி பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25E, 25B, 27C ஆகிய பேருந்துகளை சாமியார் மடம் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றையெல்லாம் மனுவாக எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தேவையான அளவிற்கு ஓட்டுநர், நடத்துநர்களை பணி நியமனம் செய்யாத காரணத்தால், பல பேருந்து சேவைகளை நிறுத்திவிட்டார்கள். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய துறையில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை பணியமர்த்துவதற்கான அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அத்தகைய சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, அந்தப் பகுதிகளில் நிறுத்தப்பட்ட பேருந்து சேவைகள் மீண்டும் இயக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(வினா வரிசை எண்கள் 13 மற்றும் 14 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.